


# உலகம் உயரும்

உழைப்பதனால்தான் உலகம் உயரும்
ஒவ்வொரு வகையிலும் மிளிரும்
இருட்டினை நீக்கும் ஒளியைப் போன்று
இளைஞர் கூட்டம் திரளும்

(உழைப்பு)

நம்பிக்கை கொண்ட மனிதர்களால்தான்
நாட்டினில் பெருமை கண்டோம்
சிந்தனைத்தெளிவு கண்டவர்களாலே
சீர்திருத்தங்கள் கொண்டோம்

எத்தனை நாள்தான் இப்படியே சிலர்
சோம்பலில் திளைத்த இருப்பார் - இந்த
பித்தரை மாற்றி கடமையை ஆற்றிட
எவர்தாம் பொறுப்பை ஏற்பார்

(உழைப்பு)

விண்ணிலிருக்கும் சந்திரன் மீது
நடந்து முடிந்தான் மனிதன் - அந்த
சாதனை செய்யக் காரணம் ஆனது
தளர்வில்லாத முயற்சி

எங்கும் எதிலும் ஏற்றம் காண
எல்லோராலும் முடியும் - அதை
மெய்ப்படச் செய்ய வேண்டியதெல்லாம்
இடைவெளி இல்லாப் பயிற்சி

(உழைப்பு)